maposi.in

செங்கோல்
ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்.
லர் 19] சென்னை, மார்கழி 1 (15-12-68) ஞாயிறு விலை 25 காசு [இதழ் 3

கூலிக்கு மாரடிக்கும் கும்பல் ஏசித்திரிகிறது

பா. வெ. விசுவேசுவரன்

னி கிடைக்கும் போதெல்லாம் ரலெழுப்பும் திருவாளர் 'சாட்டை' ார், அண்மையில் திருவாய் மலர்ந் ருக்கிறார். "முன்னாள் என் தலை ரும், இந்நாள் தி. மு. க. ஊழியரு ான திரு. ம. பொ. சி. பொய் சால்லுகிறார். கன்னியாகுமரியில் கம் கிடையாது. தேவசகாயம், சல்லையா இருவரும் கழகத்தைச் ர்ந்தவர்களில்லை" — இவ்வாறு பெருந் தலைவரின் புதிய சிஷ்யர் தை பளக்கிறார்.

தமிழரசுக்கழக முன்னாள்பொதுச் யலாளரே! இந்நாளில் காம ரசரின், சாட்டையால் பிறரை டிக்கப் புறப்பட்டு, தன்னைத் ானே அடித்துக்கொண்டு, சத்திய ர்த்தி பவனத்திற்குள் ஓடி ஒளிந்த ாரே! 'தமிழ் முழக்கம்' கண்ட ாஜியாரே! 'கவி' என்னும் பட்டத் ைக் கையெழுத்தின் தலையெழுத் ுக்கிக் கொண்டவரே! கோப் அப்க் கவிஞருடன் சேர்ந்ததால் யும் நிலைதடுமாறுகிறீரோ? ம.பொ. ாயா பொய் சொல்கிறார்?

ியாகுமரி மாவட்டத்தில் எல்லைக் ளர்ச்சி நடந்த காலத்திலே, அங்கு ிழரசுக் கழகம் வேறு; திருவி ங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்வேறு ு இருந்ததில்லை. ஏன், குமரி ல்லை முதல் குமரன் கோயில்வரை ுகூட, தமிழ்நாடு காங்கிரஸ் ு; தமிழரசுக் கழகம் வேறு— ்ற நிலை இருக்கவில்லை. கழகத் அங்கத்தினராக இருந்தவர் ங்கிரசிலும் அங்கத்தினராக இருந் ர். காங்கிரசில் அங்கத்தினராக ருந்தவர் கழகத்திலும் அங்கத் ராக இருந்தனர். சான்றாக, பொ. சி. அப்படித்தான் இருந் ர். எல்லைக் கிளர்ச்சியில் உயிர் த தேவசகாயம்—செல்லையா ையும் இதுதான்.

னது போக்கு வேறு; கால லாம் காங்கிரசுக்கு எதிராக தி. ிலிருந்து விட்டு, த. அ. க.வுக்கு தபின்னர், 'நானும் பழைய காங் ஸ்காரன்' என்று கூறித் திரிந்தீர்! றல், தமிழரசுக் கழகத்திலிருந்து ளியேற்றப்படும்வரை நீர் காங் ில் அங்கத்தினராக இருந்ததே லை. அதனால், தேவசகாயம்— ல்லையாவிலை உமக்குப் புரியாது!

ந்த, திருவாளர் காமராசரின் ர்களில் வேறு ஒருவர், சை உள்ளதுகளெல்லாம் ாமுள்ளதல்ல! கரப்பான் ாடு.

பூச்சிக்கும் மீசை உண்டு..." ('நாத்திகம்' 29-11-68) என்கிறார். அகில உலக விஞ்ஞானிகள் திகைக்கும் வண்ணம், இந்தியப் பேரரசு விஞ்ஞான உலகில் மேலும் முன்னேற பெருந்தலைவரின் வாரிசு மீசைபற்றி ஆராய்ச்சி செய்கிறது. "மானமுள்ளவனுக்கு உள்ளது மீசை ஒன்றுதான்" என்று தலைவர் ம. பொ. சி. கூறினார். அதற்கு, 'கரப்பான் பூச்சிக்கும் மீசை உண்டு' என்கிறார் நாத்திகனார். கரப்பான் பூச்சிக்கே மீசை இருக்கும்பொழுது உனக்கு இல்லையே, ஏன்? பல்லக்குத் தூக்கி பல்லாண்டு பாடும் அரசியல் கோழைகளுக்கு இருக்காது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிபவனுக்கு எல்லோர் நாக்கும் தொங்குவது போல்தானே தெரியும்?

இலத்தப்பம் அரசியல்வாதிகளிடம் இதைவிட வேறு என்ன ஆராய்ச்சியை எதிர்பார்க்கமுடியும்?

சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் போராடி, வெள்ளையனிடம் அடிபட்டு உதைபட்டு சிறைபுகுந்தவர்கள் அன்றையக் காங்கிரசார், பதவிக்காக பல்லை இளித்து பல்லாண்டு பாடுவோர் இன்றையக் காங்கிரசார்.

வெள்ளையனுக்கு எதிராக ஆவேசக்குரல் எழுப்பியவர்கள் அன்றைய காங்கிரசார். மேடையில் ஏறிவிட்டால், என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசுபவர்கள் இன்றையக் காங்கிரசார்.

கொள்கைக்காக போராடியவர்கள் அன்றையக் காங்கிரசார். முன்னோர்களின் சரித்திரம் தெரியாது, இந்நாளைய அரசியல் புரியாது கூலிக்காக மாரடிக்கும் கும்பல்தான் இன்றையக் காங்கிரஸ்.

கோப்பை மன்னனை மாஸ்கோ ரிட்டர்ன் மன்மதன்தானே, இன்று அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவரின் இன்னாள் வலது கரம்.

நாலுகோடித் தமிழர்களின் நல்ல இதயங்களை நஞ்சாக்க முயலும் 'நாத்திகம்' பத்திரிகை ஆசிரியர் தானே, பெருந் தலைவரின் இடது கரம்.

தமிழ் தேசியத்தைக் கண்டுபிடித்து, அதனை அகில உலகத்திற்கும் அறிமுகப்படுத்த முயன்று, பின்னர் காங்கிரஸ் கூடாரத்தில் குடி புகுந்த ஐம்பத்துத்தானே காலா காந்தியின் முதுகெலும்பு.

இந்த லட்சணத்தில், மகாத்மா மடியில் வளர்ந்த—காங்கிரஸ் மாமேதைகள் அணைப்பில் வளர்ந்த காங்கிரஸ் என்று சொல்லி என்ன பயன்?

தலைவர் ம பொ. சி. பெருந் தலைவரை நோக்கி கேள்வி கேட்டால், குறுந்தலைகள்தான் பதில் சொல்கின்றன. பெருந் தலை வாய் பேசா ஊமையோ!

தலைவர் ம. பொ. சி. சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் பல முறை சிறை சென்றாரே, அது பதவி ஆசையினாலா?

உழுது பயிரிட்ட பின்னர், அறுவடையின்போது பலனை உங்களுக்கு விட்டு, சோசலிசத் தமிழ்க் குடியரசு அமைக்க குரல் கொடுத்தாரே, அது பதவி ஆசை காரணமாகவா?

வடக்கெல்லை—தெற்கெல்லை மீட்டது, தேவிகுளம்—பீர்மேடு போராட்டம் நடத்தியது, தட்சணப் பிரதேச அர்த்தால் செய்தது, பதவி ஆசை கொண்டதனாலா?

"மதராஸ்" என்ற அவமானப் பெயரை நீக்கி, "தமிழ்நாடு" என்ற தன்மானப் பெயரிட 1700 தொண்டர்களை சிறைக்கு அனுப்பினாரே, அது பதவி ஆசையினாலா?

பதவி ஆசை தான் காரணம் என்றால், நாகர்கோவிலில் காமராசர் போட்டியிடுவது ஏன்?

சிலம்புச் செல்வர் சட்டமன்ற உறுப்பினரானால், அது பதவிஆசை. ஸ்ரீமான் காமராசர், பாராளுமன்ற உறுப்பினராக நினைப்பது என்ன ஆசை? பெருந் தலைவருக்குப் பரிந்து பேசும் குறுந்தலைகளே! ஏன் வாயை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள்? பிரதமர்களை உருவாக்கியதால் அகில உலகமும் கிங் மேக்கர் என்று புகழ்ந்ததே!

கிங் மேக்கர், மத்தியில் அமைச்சராக நினைக்கலாமா? பச்சைத் தமிழருக்கு அது அவமானமில்லையா? அமைச்சர் பதவி 'கிங் மேக்கர்' என்னும் தகுதியைக் குறைத்து விடாதோ? 'கிங் மேக்கர்' அமைச்சர் ஆனால், உலகம் சிரிக்காதோ!

காலா காந்தி நாகர்கோவில் தொகுதியைத் துருவித் துருவி ஆராய்ந்த பின்னர் வேட்பாளராக விரும்பினாரே, எதனால்? விருதுநகரில் அவர் போட்டியிட்டபோது, தொகுதி மக்கள் கருத்தறிந்துதான் போட்டியிட்டாரோ? உள்ளுக்குள்ளே காங்கிரஸ்காரர்களை பிரசாரம் செய்ய ஏவிவிட்டு, வெளிக்கு "மக்கள் கருத்தறிந்துதான் போட்டியிடுவேன்" என்றாரே, இதென்ன ஸ்டண்ட்! வெளிப்படையாக, 'நான் தான் வேட்பாளர்' என்று சொல்லி போட்டியிடத் தயக்கம் ஏன்? வெட்கமாக இருக்கிறதோ விருதுநகர் வீரருக்கு?

பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களெல்லாம், எங்கப்பா ஓட்டும் எங்கம்மா ஓட்டும் உங்களுக்குத்தான் என்று சொன்னார்களாம்! சிறு குழந்தைகள் எல்லாம் பெருந்தலைவருக்கு மாலையிட்டனராம். இதுபோன்ற வரவேற்பு கிடைத்த பின்னரும் திருமலைப் பிள்ளை தெரு பெரியவரது வாய் திறக்கவில்லை. என்னைப் இல்லாத தலையைத் தடவிப் பார்த்த பின்னர்தான், வாயிலிருந்து முத்து உதிர்த்ததோ?

நாகர்கோவிலில் நிற்க, காமராசருக்கு என்ன யோக்கியதை என்று தலைவர் ம பொ. சி. கேட்டால், ரொட்டித் துண்டுக்கு ஆசைப்பட்டு ஓடியவர்களா, ம.பொ. சி.க்கு பதவி ஆசை என்பது?

கூலிக்கு மாரடிப்போரா, ம. பொ. சி.யின் பேச்சைக் கேட்டு முனகுவது?

புறமுதுகுகாட்டி ஓடிய கோழைகளா, ம. பொ. சி.யின் மீசையைப் பற்றி ஆராய்வது?

வெட்கம், மானம், ரோஷம், ஏதாவது ஒன்றிருந்தால், இந்த வகையான ஆராய்ச்சியைச்செய்வார்களா?

மீண்டும் கேட்கிறேன்; உங்கள் பெருந் தலைவருக்குப் பதவி ஆசை இல்லை யென்றால், எதற்கையா எம். பி. பதவி? இத்தாண்டு கால

(8-ஆம் பக்கம் பார்க்க)

செங்கோல்
ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்
15-12-68 ★ ஞாயிறு

காங்கிரசின் தற்கொலை முயற்சி!

காங்கிரஸ் கட்சியை யாரும் அழிக்க முடியாது. ஆம்; அதன் பின்னணி வரலாறு அவ்வளவு வலிமை வாய்ந்தது. ஆனால், அது தன்னைத்தானே அழித்துக்கொண்டு வருகின்றது. இதற்கு அரியானா மாநில நிகழ்ச்சிகளே சான்றாக அமைந்துள்ளன.

அரியானாவில் காங்கிரஸ் அல்லாத அமைச்சரவையை கவர்னரின் துணைகொண்டு அழித்து முடித்தது மத்திய அரசு. அப்போதே அதனை நாடு ஆட்சேபித்தது. ஆனால், "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்னும் போக்கிலே நடந்து கொண்டது காங்கிரசின் செல்வாக்கிலுள்ள மத்திய அரசு. பின்னர், அந்த மாநிலத்திலே மறுதேர்தல் நடத்தி, வாக்காளர்களின் ஆதரவைக் கோரியது காங்கிரஸ். அப்போது அந்தக் கட்சி சொன்னதென்ன? நிலையான ஆட்சியை அமைக்க காங்கிரசால்தான் முடியும் என்று கூறியது. என்ன காரணத்தாலோ, மறு தேர்தலிலே, காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்துவிட்டது. காங்கிரஸ் அமைச்சரவையும் தோன்றியது. ஆனால், அது நிலையான ஆட்சியாக அமையவில்லை. காங்கிரஸ் எம் எல். ஏ.க்களிலே பதினொரு பேர் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி விட்டனர். அதனால், காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்துவிட்டது. ஆம்; காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். பொதுத் தேர்தலின்போது காங்கிரசுக்குத் தோல்வியைத் தந்த அரியானா வாக்காளர்கள், மறு தேர்தலிலே, பழைய தவறுகளை மறந்து மன்னித்து காங்கிரசுக்கு வெற்றி தந்தனர். வாக்காளர்களின் மன்னிப்பைப் பெறவும் தனக்குத் தகுதி இல்லை என்பதை அரியானா காங்கிரஸ் காட்டிவிட்டது.

யாரோ சில தனிநபர்களின் தவறு என்று கூறி காங்கிரஸ் மேலிடம் ஆறுதலடைவதற்கில்லை. நாடு முழுவதிலும் "அரியானா" தான்.

தமிழகத்திலே, காமராசர்—சுப்பிரமணியம் கோஷ்டியினரிடையே மோதல். காங்கிரஸ் மாளிகையிலேயே, காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே, காமராசர் கண்ணெதிரிலேயே அடிதடி நிகழ்கிறது. ஒரு காங்கிரஸ்காரர் மீது இன்னொரு காங்கிரஸ்காரர் நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்தார்.

காங்கிரஸ் பேச்சாளர், "குடிப்பது என் கொள்கை; குடியை எதிர்ப்பவர் என் பகைவர்" என்று வெளிப்படையாக அறிக்கை விடுகிறார். இந்த அறிக்கைக்கு அப்புறமும் அவர் காங்கிரஸ் மேடையிலே காட்சியளிக்கிறார்.

மத்தியிலே, பிரதமருக்கும் துணைப் பிரதமருக்கும் இடையே உட்பூசல். ஆம்; மத்தியிலும், மற்ற மாநிலங்களிலும் இன்னும் கொஞ்சம் பொறுத்து நாம் காணப்போகும் கோரக் காட்சியை அரியானா மாநிலத்தில் முன்கூட்டியே காண்கின்றோம்.

காங்கிரஸ் கட்சி, தன்னைத்தானே அழித்துக் கொண்டு வருவது கண்டு நாம் மகிழ்ச்சி அடையவில்லை; வேதனையடைகின்றோம். தேசிய பாரம்பரியத்தைச் சார்ந்த எந்த ஒரு கட்சியையும் வளரவிடாமல் செய்து வந்தது காங்கிரஸ். அதனால், காங்கிரஸ் ஒன்றுதான் இன்றுள்ள அகில இந்தியக் கட்சி—என்ற அவலநிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையிலே, அதுவும் தன்னைத் தானே அழித்துக்கொண்டு வருகின்றது. காங்கிரஸில் உள்ள தனி நபர்களின் தவறுகளை எடுத்துக்காட்டி, அந்தக் கட்சிக்கு நலம் செய்ய விரும்புவோரையெல்லாம் நாக்கில் நரம்பின்றித் தூற்றுகின்றனர் தமிழக காங்கிரஸ்காரர்கள். இவர்கள் அரியானா நிகழ்ச்சிபற்றி மவுனம் சாதிப்பது ஏன்? அரியானா போக்கு கண்டு காங்கிரஸ் மகாசபைத் தலைவர் அதிர்ச்சி அடைந்திருக்கிறாராம். பாவம்! அதிர்ச்சி நீங்கி, மூர்ச்சை தெளிந்தால், இவர்கள் பதிலளிப்பார்களோ என்னவோ?

கேள்வி? பதில்!

சி. தனபால், பாலூர்.

தோன்றிய நாள்தொட்டு கலாசார இயக்கமாகவே வளர்ந்துவந்த தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாக்கியது குடந்தைப் பொதுக் குழு. பின்னர், திரும்பவும் கலாசாரக் கழகமாக மாற்றியது சேலம் பொதுக்குழு. அதன் பின்னும் மாநகராட்சித் தேர்தல்களிலே கழகம் போட்டியிடுகிறதே, காரணமென்ன?

காரணமா? சேவா உணர்ச்சிதான். கழகம், தான் பிறந்த நாள் முதலே அரசியலோடு தொடர்பு கொண்டு வந்திருக்கின்றது. ஒவ்வொரு பொதுத் தேர்தலின்போதும் தன் கொள்கைகளுக்கு ஆதரவு தருவோருக்குத் துணைபுரிந்திருக்கிறது. சட்டமன்ற, ஊராட்சி—நகராட்சி மன்றத் தேர்தல்களிலே போட்டியிட விரும்பும் தன் தோழர்களுக்கு—வாய்ப்புள்ள இடங்களில்—அனுமதி வழங்கி, அவர்களுடைய வெற்றிக்காகப் பாடுபட்டும் வந்திருக்கிறது. அதே நிலைதான் சேலம் பொதுக்குழுவுக்குப் பிறகும்.

கலைக்கப்பட்டுவிட்ட வங்க சட்டப் பேரவையிலே, கட்சி அரசியலை விரும்பாத—காந்தியடிகள் தோற்றுவித்த சர்வ சேவா சங்கத்தினர் ஐந்துபேர் அங்கம் வகித்தனர். ஆம்; சேவா உணர்ச்சியுடன்தான்! அதுவே நம் கழகத்தின் நிலையும்.

தி. ப. சுப்பிரமணியம், திருப்பத்தூர்.

அடுத்துவரும் நகராட்சித் தேர்தல்களில் நம் கழகத்தவர் போட்டியிட வாய்ப்புள்ள நகரங்களிலே கழகம் கடைப்பிடிக்கவிருக்கும் நடைமுறை என்ன?

கழகம் வலுவாக இயங்கும் நகரங்களில் மட்டுமே இந்தப் பிரச்னை எழ இடமுண்டு. அங்கு நம் கழக நிர்வாகிகள் நகர தி. மு. க. உள்ளிட்ட தோழமைக் கட்சிகளுடன் பேசி, ஒரு ஏற்பாடு செய்துகொள்வதே சிறந்த வழியாகும்.

சு. கலியாணம், சென்னை—21

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் சுதந்தரா வேட்பாளருக்குப் பிரசா செய்ய தங்களுக்கு அழைப்பு தால் செல்வீர்களா?

தமிழ்நாடு சுதந்தராகட் பொதுச் செயலாளர் எஸ். எஸ். மாரிசாமி அ களும், வேட்பாளர் டாக் மத்தியாஸ், நாகர்கோ நகரத் தொகுதி சட் பேரவை உறுப்பினர் பாலன் (தி. மு. க.) ஆகி ரும் என்னை நேரில் சந்தி அழைத்துள்ளனர். உ நிலை அனுமதித்தால், மாத இறுதியில் செல்வே

தா. வேலு, எண்ணூர்.

தாங்கள் டிசம்பர் 2ல் எண் ரில் நடைபெற்ற மேயர் து மேயர் பாராட்டுக் கூட்ட நிகழ்த்திய சொற்பொழிவு ' கோலி'ல் முழுசாக வெளிவரு

'செங்கோல்' பக்கங் 12ஆக இருந்தது 8ஆ குறைக்கப்பட்டுவிட்டதா தொடர் கட்டுரை, இரண்டு பக்கங்கள் ஒது வேண்டியிருப்பதாலும் சொற்பொழிவுகளில் கியமானதைக்கூட வெ யிட வாய்ப்பில்லாமல் போ விடுகிறது. விரைவில் பக் கள் கூட்டப்படும். அதுவ பொறுத்திருக்கவும்.

செ நல்லசாமி, மதுரை.

நவீன காங்கிரஸ்காரர்கள் ரென்று தங்கள் கட்சி ஏடுகளி யும் மேடைகளிலேயும் விடா தங்களைத் தாக்கி எழுதியும் யும் வருகிறார்களே, கார மென்ன?

அது, 'ப்ளூ' காய்ச் போல, சீஸன் காய்ச் நாகர்கோவில் தேர்தல் மு ததும் 'டெம்ப்ரேச் இறங்கிவிடும்!

மணிமாறன் பி. ஏ., திருச்

"விடுதலைப்போரில் "த வளர்ந்த வரலாறு" தொ கட்டுரையிலே, தி. மு. க.வின் தமிழ்த் தொண்டு குறிப்பிடப்ப தேன்?

தமிழுக்கென்றே பிற தமிழுக்காகவே வாழ் வரும் தமிழரசுக் கழகத் தொண்டும் குறிப்பிடப் வில்லையே! 'விடுதலைப் பின்' என்ற இறுதி அ யாயத்தில் த. அ. க.—தி. க. தமிழ்ப்பணி சுருக்கமா கூறப்படும். சுயமரியா இயக்கத்தைப்பற்றி வி சிக்கும்போதும் தாங் விரும்புவது கிடைக்கும்.

தொடர் கட்டுரை

விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு

ம.பொ.சி.

(35)

காந்தி சகாப்தம்-10

தமிழ் உரைநடைக்குப் புதிய பொலிவும் வலிவும் அளித்த தேசியவாதிகளிலே மகாகவி பாரதியாரே முதன்மை பெறுகிறார். மகாகவி ஒருவர் தமது தாய்மொழியின் உரைநடையையும் வளப்படுத்துவதற்கு வெற்றிகரமாகப் பணி புரிவதென்பது எளிதான காரியமன்று. பிற கவிஞர்களிடம் காணமுடியாத இந்த அரிய பணியை தேசியக்கவி பாரதியார் மிகவும் எளிதாகச் செய்து முடித்திருக்கிறார்.

'ஞான ரதம்' என்னும் அவரது உரைநடை நூல் தமிழ்த் தாய்க்கு இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு காலத்தில் பாரதி தந்த காணிக்கையாகும். இந்த நூலைப்பற்றி, பிரபல தேசியவாதியும் தொழிற்சங்க இயக்கத் தலைவருமான திரு. எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு என்பார் "சென்று போன நாட்கள்" என்ற தமது கட்டுரையில் கூறியிருப்பது வருமாறு:—

"ஞான ரதம் என்ற தலைப் பெயருடன் தமிழ் நாடு என்றும் கண்டிராத துள்ளிக் குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில் இயற்கையின் அழகுகளைப்பற்றியும், தேசச்செய்திகளைப்பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மனமாறுபாடுகளைப்பற்றியும் அற்புதமான கற்பனையுடன் வாரந்தோறும் 'இந்தியா'வில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்கு சேர்த்து 'ஞான ரதம்' என்று புத்தகமாக வெளியிட்டார். அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நடையில் அமைந்தது."

"இந்நூல் சென்னையிலே தொடங்கப் பெற்றிருக்கிறது. திருவல்லிக்கேணியிலே வீரராகவ முதலி தெருவில் ஒரு மாலை நேரத்தில் பாரதியார் சிரம பரிகாரத்தின் பொருட்டு ஒரு மஞ்சத்தில் படுத்திருப்பதாக நூலின் பீடிகை தொடங்குகிறது. ஞான ரதத்திலேறிப் பல உலகங்களுக்குப் பறந்து சென்ற அவர் தர்ம லோகத்திலிருந்து தவறி விழுந்து மூர்ச்சை போட்டு பழைய திருவல்லிக்கேணி இல்லத்திலேயே கண்விழித்ததாக நூல் முடிகிறது."

புதுமைக் கவி பாரதியாரின் "ஞான ரதம்" பற்றி, புதுவைக் கவி பாரதிதாசனார் வருணிக்கையில், "ஞானரதம் போல் ஒரு நூல் எழுது தற்கு நானிலத்தில் ஆளில்லை" என்று கூறுவாரானால், அந் நூலின் சிறப்பை உணர்த்துவதற்கு வேறு சான்றும் வேண்டுமோ!

விடுதலைப் பாசறையிலேயே தங்கள் ஆயுளின் பெரும் பகுதியைக் கழித்த தேசபக்தர்கள், கதைகள் எழுதியும், கட்டுரைகள் வரைந்தும், பத்திரிகைகள் நடத்தியும், நாடகங்கள் புனைந்தும் உரைநடைத் தமிழை வளப்படுத்தியதோடு, அதனைக் கருவியாகக் கொண்டு நாட்டிலே கருத்துப் புரட்சியையும் விளைவித்தனர்.

வ. வே. சு. ஐயர், 'மங்கையர்க்கரசி முதலிய கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலொன்றைப் படைத்தார். "கம்ப ரசனை" என்னும் பெயரில் அவர் படைத்த விமர்சன நூல் அவரது உரைநடையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

வடமொழியிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி அதனோடு இரண்டறக் கலந்திருக்கும்வேதாந்த சாத்திரங்களை—மணிப்பிரவாள மொழியில் அல்லாமல்—நல்ல தமிழிலே எழுதி வழங்கிய சுப்பிரமணிய சிவாவின் தொண்டு போற்றத் தக்கதாகும். "மோட்ச சாதன ரகசியம்" என்னும் அவரது நூல், வேதாந்த ரகசியங்களை எளிதில் விளக்கும் திறமை தமிழ் மொழிக்கு உண்டென்பதைப் புலப்படுத்துகின்றது.

தலைவர் ராஜாஜி, தெளிவான உரைநடையிலே எண்ணற்ற நூல்களை இயற்றியுள்ளார். முதறிஞரான அப்பெரியார், தாய் மொழியான தமிழிடத்துக் கொண்ட ஆழ்ந்த பற்றுதலின் விளைவாக எண்ணற்ற தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். ராஜாஜியின் உரை நடை அவருக்கெனவே அமைந்ததாகும்.

ராஜாஜியின் உரைநடைபற்றி, ரோமாபுரியிலுள்ள வாடிகன் நகரில் போப் ஆண்டவரின் சாம்ராஜ்யத்தில் பணிபுரிந்த புனிதப் பாதிரியான ஜெரோம் டிசௌஸா பின்வருமாறு கூறுகின்றார்:

"இராஜாஜியினுடைய மதியின் தெளிவுக்கு அனுசரணையாக அவரது வாக்கும் தெளிவானது. அவரது வாக்குவன்மை விசேஷமானது. அவருக்கு ஓர் எழுத்து நடை உண்டு. அது எளிமையானது, நேரடியானது, சக்தி வாய்ந்தது, விரிந்த வீச்சு உள்ளது. அதன் எளிமையைப் பார்க்கும்போது இப்படி விரிந்த வீச்சும் இருக்குமென்று தெரியாது ஏமாந்து விடுவோம். இது அவரது தமிழ் நடைக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன்."

—['கல்கி' 8-12-68 இதழில் வெளியான 'தெய்வத் தூதர்' என்னும் கட்டுரையின் ஒரு பகுதி.]

புனிதப் பாதிரியார், ராஜாஜியின் ஆங்கில உரைநடைக்கு செய்துள்ள விமர்சனம், அவரது தமிழ் உரைநடைக்கும் பொருந்துவதேயாகும்.

ராஜாஜி முதன் முதலாக இயற்றிய உரைநடை நூல் அவரது சிறைவாசம் பற்றிய "சிறையில் தவம்" என்பதாகும். அவர் தந்த மற்றொரு அரசியல் நூல் 'அபேதவாதம்' என்னும் பெயர் கொண்டது.

ராஜாஜியின் உரைநடையை உவமை நடை என்றும் சொல்லலாம் எதையும் உவமை காட்டி விளக்குவதிலே அவர் தனி ஆற்றல் பெற்றவர் உவமையானது உரைநடையின் அழகுக்கு அழகு செய்வதாகும்.

'அபேதவாதம்' என்ற தமது நூலிலே தனி உடைமையை அழித்துவிட்டு, அதற்கு மாற்றாகத் தோன்றும் பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவகப்படுத்திக் காட்டுகின்றார். இந்த நூல்—அவர் இயற்றிய காலத்தில், தமிழ் இலக்கியக் களஞ்சியத்திற்குக் கிடைத்த ஒரு புது வரவு என்று கூறலாம். இன்னும் அவ்வப்போது எழும் அரசியல், பொருளாதார, மொழிச்சிக்கல்களைத் தெளிவுபடுத்தி மக்களுக்கு வழிகாட்டும் வகையில் ராஜாஜி வரைந்துள்ள கருத்தோவியங்களும் நூல்களாக வெளிவந்துள்ளன.

தமிழ் எழுத்தாளர் உலகிலே திரு. வி. கலியாணசுந்தரனாரின் வாரிசாகத் தோன்றிய 'கல்கி' இரா. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள அரும்பணிகள் ஒரு தனி நூலுக்குரியவையாகும். 'கல்கி'யின் கதைகளையும், கட்டுரைகளையும் விரிவாக விமர்சித்து எழுதினால், அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் தமிழ் வளர்ந்த வரலாற்றைக் கூறும் முழு நூலாக அமையும். உரை நடைத் தமிழைக் கருவியாகக் கொண்டு அவர் தொடாத துறையே இல்லை எனலாம். அவர் இயற்றிய 'அலைஓசை'யை விமர்சிக்கும் 'தமிழ் கலைக் களஞ்சியம்,' "விடுதலைப் போராட்டம் முழுவதனையும் இந்தியச் சூழ்நிலையோடு ஒன்றுபடுத்தி விளக்குகின்றது. இது, காந்தி யுகத்தின் புராணம்" (பகுதி 5; பக்கம் 496) என்கின்றது. இது முற்றிலும் உண்மை.

புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை எழுதி வைத்துப் போயுள்ள 'டைரி', கொச்சைத் தமிழில் அமைந்திருப்பினும், சரித்திர தஸ்தாவேஜு என்னும் பெருமையைப் பெற்றுவிட்டது. அதனால், பிரெஞ்சு—ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் அந்த டைரி மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலே வெறும் கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வந்த அதனை முதன் முதலாக அச்சேற்றிய பெருமை தேசபக்தர் வ. வெ. சு. ஐயருக்கே உரிமையாகும். அவரது 'பால பாரதி' மாத இதழிலே, ஆனந்தரங்கம் பிள்ளையின் 'டைரி' தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டு வந்தது.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் சரித்திரங்களையும் தமிழிலே மொழி பெயர்க்கும் பணியினையும் தேசியவாதிகள் நிரம்பச் செய்துள்ளனர்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், வங்க நாட்டுக் கவி ரவீந்திரநாத் தாகூரின் கருத்தோவியங்கள் சிலவற்றைத் தமிழாக்கித் தந்துள்ளார். புக்கர் வாஷிங்டன், சந்திரகுப்தன், அகஸ்தின், வீர ரத்தின பாஜிப்ரபு (வீர சிவாஜியின் தளபதி) ஆகியவர்களின் சரித்திரங்களை வ. வே. சு. ஐயர் தம்முடைய 'பால பாரதி'யில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

மார்க்க அரேலியர், சோக்ரதர் ஆகிய மேனாட்டுச் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்களுடைய வாக்குகளையும் அறிஞர் ராஜாஜி தமிழிலே தந்துள்ளார்.

பாரதியார், ராஜாஜி, திரு. கே. சந்தானம் ஆகியோரால் தனித்தனியே தரப்பட்டுள்ள பகவத்கீதை மொழி பெயர்ப்பும் தமிழ் அன்னைக்கு அவர்கள் தந்த காணிக்கையாகும்.

வீர சாவர்க்கர், 1907ஆம் ஆண்டிலே தாம் லண்டனில் வாழ்ந்த காலத்தில் "1857 சுதந்திரப் போர்" என்னும் நூலை இயற்றினர். ஆம்; ஏகாதிபத்திய எழுத்தாளர்களால் "சிப்பாய்க் கலகம்" என்று வருணிக்கப்பட்ட உரிமைப் புரட்சிக்கு "சுதந்திரப் போர்" எனப் பெயர் தந்து அதற்கான சான்றுகளையும் காட்டினர். மராத்தியிலும், ஆங்கிலத்திலும் அவர் எழுதிய இந்த நூல் 1928 ஆம் ஆண்டில் முதன் முதலாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. மூல நூல் இந்தியாவிலும் பிரிட்டனிலும் பறிமுதல் செய்யப்பட்டிருந்ததால், தமிழ் மொழி பெயர்ப்பை வெளியிட்டவர்களும், அதனை வினியோகிக்கும் பணியில் பங்கு கொண்டவர்களும் அரசினரின் அடக்குமுறைக்கு ஆளாயினர். அவர்களிலே சிலர் சிறைத்தண்டனையும் பெற்றனர். ஆம்; விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழிலே அறிவு நூல் ஒன்றை வெளியிட வேண்டுமானால், சிறைத் தண்டனைக்கும் துணிந்துதான் அதனைச் செய்யவேண்டியிருந்தது.

காந்தியடிகள், குஜராத்தி மொழியில் எழுதி வெளியிட்ட "சத்திய சோதனை" என்னும் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விடுதலைப் போராட்ட காலத்திலே வெளியிடப்பட்டது. 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி இதனை மொழி பெயர்த்தார் இந்த மொழி பெயர்ப்பு வெளியானபின் ஆயிரமாயிரம் தமிழர்கள் அதனைப் படித்து காந்தியவாதிகளாக மாறினர். திரு. வி. க. எழுதிய "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்னும் நூல் அடிகளார் எழுதிய சத்திய சோதனைக்கு விமர்சனமாக அமைந்தது.

தேசியவாதிகள், பழைய புராணங்களுக்குப் புதிய ஒளியைக் காட்டி, அவற்றை தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பயன்படுத்தினர். பழமையிலே புதுமையைக் கலக்கும் இந்தப் பணியைத் திறன்படச் செய்தவர் திரு. வி. கலியாண சுந்தரனாரேயாவார். சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணம், சமண சமயத்தினருக்கு எதிராகப் பயன்படுத்தப் பெற்றது. மதுரையிலே ஆயிரம் சமணர்கள் திருஞான சம்பந்தப் பெருமான் தூண்டுதலால் கழுவேற்றப்பட்டனர் என்றொரு கதை உண்டு. ஆராயும் திறனற்றோர், அந்தக் கதைக்கு பெரிய புராணத்தையும் ஆதாரமாகக் கொண்டனர்.

தேசிய ஒருமைப்பாட்டினை விரும்பிய திரு வி. கலியாண சுந்தரனார், சைவர்—சமணர் பூசலை வெறுத்தார். அமிழ்தினுமினிய தமிழ் மொழியை, புறச் சமயத்தை அழிக்கும் நஞ்சாகப் பயன்படுத்துவதனைக் கண்டு மனம் வருந்தினர். சைவ—சமணப் பூசலைப் போக்கும் வகையில் பெரிய புராணத்துக்குக் குறிப்புரை கண்டார். இதுபற்றி அவரே கூறக் கேட்போம்:

"பெரிய புராணத்திற்கு இளமையில் ஒரு குறிப்புரை கண்டேன். அரசியல் உலகில் ஈடுபட்ட பின்னர் ஒரு குறிப்புரை கண்டேன். அதற்கும் இதற்குமிடையேயுள்ள வேற்றுமை வெள்ளிடை மலையென விளங்கா நிற்கின்றது. ஆள் ஒருவன் வேற்றுமையுருவானேன்? அக்கால மன நிலை வேறு, இக்கால மனநிலை வேறு."

"பெரிய புராணம் இரண்டாம் பதிப்பில் புரட்சி நிகழ்ந்துள்ளது. உரிமை, புரட்சியை நிகழ்த்தி நிலைமையைச்சீர் செய்வது இயற்கையே. என்ன புரட்சி! சைனத்தைப் பற்றி சைவ உலகில் சில கறைகள் படிந்தன. அக்கறைகள் களையப்பட்டன. அக்களைவே புரட்சியாயிற்று. திருஞான சம்பந்தர், பெண்ணின் பெருமையும், இயற்கை இன்பமும் செழிக்கச் சேவை செய்தவர் என்பதும், அவர் சமணர் உலகையே அழிக்கப் போந்தவர் அல்லர் என்பதும், திகம்பர இனத்துள் சைடைமாளில் புகுந்த சில மாசுகளைக் களையவே அவர் முயன்றார் என்பதும்...எனது நூலில் விவரிக்கப்பட்டன."

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்; பக். 142.

இப்படி, தமிழில் உள்ள இதிகாச—புராணங்களையும், சாத்திர—தோத்திரங்களையும் சார்ந்து எழுந்த சமயப் பூசல்களை ஒழிக்க தேசியவாதிகள் ஆற்றிய பெருந்தொண்டு இலக்கியத் துறையிலே மறுமலர்ச்சியை உருவாக்கியது.

காந்தியடிகள், மாபாரதக் கதையின் பாத்திரங்கள் சரித்திர நாயக—நாயகிகள் அல்லர் என்றும், வியாச முனிவரின் கற்பனைப் பாத்திரங்களே என்றும் கூறியுள்ளார். இராஜாஜி, தாம் இயற்றிய 'சக்கரவர்த்தித் திருமகன்' என்ற நூலில், நிறை கர்ப்பவதியான சீதையை இராமன் வனத்திற்கனுப்பிய செயலைக் குறைகூறியுள்ளார். வியாசர் விருந்திலும் விமர்சன ரீதியில் புதிய விளக்கங்களைத் தந்துள்ளார்.

பாண்டவருக்கும் துரியோதனாதியருக்குமிடையே நடைபெற்ற மாபாரதப் போர்பற்றி மகாகவி பாரதியார் தரும் விளக்கம் வருமாறு:

"ஒரு சங்கத்தின்—ஒரு சாதியின்—ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும் வரை அதற்கு நாசம் ஏற்படாது. பாரததேசத்தில் முற்காலத்திலே பாரத சாதி முழுமையும் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாக பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால், மற்ற குலத்தவரும் நெறி தவறியிருக்க மாட்டார்கள்; மகா பாரதப் போ நடந்திராது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா."

இது, "பாஞ்சாலி சபதம்" என்னும் நூலில் உள்ள பாடல் வரிகளுக்கு பாரதியார் வரைந்துள்ள குறிப்புக்களிலிருந்து கிடைக்கும் செய்தியாகும். தமிழ் மொழியில் நிறைந்த புலமை பெற்ற பெரும் புலவர்கள், பழமையிலேயே ஊறிக்கிடந்தனர். பழைய நூற்களுக்குத் தாங்கள் இயற்றிய உரைகளிலேயும், சாதி சமயப் பூசல்களுக்கு வழிவகுத்தனர். பாரத மக்களையெலாம் ஒன்றுபடுத்தும் பணிக்கு பெரும் புலவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை. கால மாறுதல்கள் கூட அவர்களுடைய கண்களைத் திறக்க வில்லை. வடலூர் இராமலிங்க சுவாமிகள் புராண—இதிகாசங்களிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டி இடித்துக் கூறியும், சைவ—வைணவப் புலவர்கள் திருந்தினார்களில்லை. ஆனால் பெரு வெள்ளம் போன்று குமரிமுதல் இமயம் வரையில் உள்ள நிலப்பரப்பிலே பெருக்கெடுத்தோடிய தேசிய எழுச்சியானது பத்தாம் பசலிப் புலவர்களை மக்களிடமிருந்து ஒதுக்கி விட்டது. பழமையிலே புத்தொளி பாய்ச்சி, புரட்சி உள்ளம் படைத்த அறிஞர்களைத் தோற்றுவித்தது.

இனி, விடுதலைப் போரிலே நாடகத் தமிழ் வளர்ந்த வரலாற்றின் ஆராய்வோம்.

(தொடரும்)

ஆங்கில பக்தர்களுக்கு அண்ணல் கூறும் ஆறுதல்!

போதனா மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும். ஆங்கிலத்தையும் போதனா மொழியாக வைத்துக்கொள்ளாமல் அதை ஒரு அன்னிய மொழியாக மட்டும் கற்றுக் கொண்டால் பாரசீகம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் தரம் குறைந்து போனதைப் போலவே, ஆங்கிலத்தின் தரமும் குறைந்துவிடும் என்று ஆச்சாரிய துருவா அஞ்சுகிறார். ஆச்சாரிய துருவாவிடம் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆயினும், இந்தக் கருத்து சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வியமைப்பில் ஆங்கில திற்கு இரண்டாவது இட கொடுக்கப்பட்டு, தாய் மொ தனக்குரிய நியாயமான இடத் தைப் பெற்றுவிட்டால், தேவை யற்ற விஷயங்களால் அளவுக் மீறி பளுவைச் சுமக்கவேண் யிருக்கும் நமது புத்திக்கு, இ னும் அத்தியாவசியமான அறி வைப் பெறுவதற்கு வசதியா விடுதலை ஏற்படும். அப்போ ஆங்கிலத்தைக் கற்பது கூ நமக்கு அவ்வளவு கடினமா இராது. அந்தச் சூழ்நிலையி நாம் கற்கும் ஆங்கில இன்னும் நல்ல தரமுள்ளதா இருக்கும். இப்போ நமக்குள்ள ஆங்கில அறி விட அது பெருமைப் படக்கூடி தாக இருக்கும் என்று நா கருதுகிறேன். அது மாத் மல்ல; அந்த நிலைமையில் ந முடைய புத்தி இன் ம் கூர்மையானதாகவும், சுறுசுறுப் புள்ளதாகவும் இருக்குமாகை யால், அதே அறிவை நா இன்னும் நல்ல முறையி பயன் படுத்திக்கொள்ள முடியும். ஆகையால் லா நஷ்டம் என்ற கோணத்தி பார்த்தால்கூட, தாய்மொழி உபயோகிப்பதென்ற முடி நமது விருப்பங்கள் எல்லா நிறைவேறுவதற்கு உதவியா இருக்கும் என்பது புலனாகும்.

—காந்தியடிகள்.

[காந்தி தொகுப்பு நூல்-12; பக். 21—22.]

"இதோ, பக்கத்தில்தான்; முந்நூறு மைல்!"

(ம. ரா. போ. குருசாமி)

சென்ற இதழ் தொடர்ச்சி

காலத்திற்குள் நாம் இதைச் சாதித்துவிடலாம். அயல் மொழி வாயிலாகக் கற்பதால் நாட்டிற்கு ஏற்படும் கால விரயத்திற்கும் சக்தி விரயத்திற்கும் நாம் ஏன் இதுகாறும் உடந்தையாக இருந்தோம் என்று எண்ணி வருந்துவோம்."

இப்படிக் கூறியவரும் காந்தியடிகளே. இதோடு நிறுத்தாமல் காந்தியடிகள் தொடர்ந்து,

"இம் முயற்சி வெற்றி பெற உடனடியாக மாநில அரசாங்க அலுவலகங்களிலும் நீதி மன்றங்களிலும் தாய் மொழியைக் கொண்டுவரவேண்டும் என்பதில் ஐயமில்லை. இச் சீர்திருத்தத்தில் நமக்கு நம்பிக்கை உண்டு என்றால், மிக விரைவில் நாம் இதைச் சாதித்து விடலாம்"

என்று கூறியுள்ளார். ஆம், 'நம்பிக்கை இருந்தால் காளைப் போவார் புராணத்துக்கு இடமில்லை' என்கிறார், காந்தியடிகள். "அவர் சொல்லலாம்—ஏனென்றால், அவர் பொறுப்பில் இருந்தவரில்லை. வெள்ளைக்காரனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தவருக்கு கல்வி பற்றி என்ன தெரியும்?" என்று எதிர்வாதம் இடலாம். மேட்டுக்குடி மக்களின் மேன்மைக்கே முகவரிகளாகத் தங்களை அமைத்துக் கொண்டவர்கள், கல்வியை எளிமையாகப் பரவ—எங்கும் எவரிடமும் பரவ விடமாட்டார்கள் ஆகவே, காந்தியடிகளே சொன்னாலும் ஏற்க மாட்டார்கள். ஆனால், தடுத்து நிறுத்தமுடியாதளவு நிலை ஏற்பட்டு நந்தனுக்குப் பித்தம் தலைக்கு ஏறித் திருநாளைப் போவாராக ஆன போது, வழிமறித்த வேதியர் வழி விட வேண்டியிருந்ததல்லவா? அந்த நிலைமை தமிழ் மக்களிடையே ஏற்படும்போது மேதைகள் தமிழுக்கு இடம் கொடுப்பார்கள். தடுத்து நிறுத்துமுறை வரையில் நிறுத்திப் பார்பதுதான்; முடியவில்லை யென்றால் விட்டு விடுவதுதான். இந்த மனப்பான்மை உள்ளவர்களெல்லாம் பொறுப்பான இடங்களில்—திருக்கோயில் நந்திபோல—இருக்கிறார்கள் என்பதைத் தம் நிர்வாகப் பொறுப்பிலிருந்து காண்பவர் அமைச்சர். ஆதலால் 'பையப்பையப் பைந்தமிழ்' என்ற வாய்ப்பாட்டை வாயளுக்காமல் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். எனவே தான் அவருடைய நிலையில் இருந்து கொண்டு 'தமிழால் இன்று இல்லாவிட்டாலும் இரண்டு தலைமுறை கழித்தாவது முடியும்' என்று சொல்கிறாரே என்று மன நிறைவு கொள்ளப் பார்க்கிறேன்.

'இன்னும் ஐந்தாண்டுக் காலத்தில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழையே பயிற்சி மொழியாக்க வேண்டி, விரைந்து நடவடிக்கைகள் எடுப்பதற்குச் சட்ட மன்றத்தில் தீர்மானம் செய்தார்களே'—இப்படியெல்லாம் கேட்டுவிடத் தோன்றலாம். அது வேறு. எப்படியோ, தமிழுக்குத் தகுதி உண்டு என்று சொன்னதே போதும் என்று மன நிறைவு கொள்ளுவோமாக.

காந்தி வழியை நம்பி, காந்தி இயக்கத்தில் ஈடுபட்ட பெரியவர்கள் செய்யாமல் விட்டு விட்ட செயல்கள் பல; அவற்றிலே உயிர் நாடியானவை சில; அத்தகைய சிலவற்றுள் முக்கியமானது பயிற்சி மொழி மாற்றம். இந்தத் துறையில் தமிழகத்துக் காந்திய வாதிகள் தங்கள் கடமையை அரை குறையாகச் செய்யத் தொடங்கி, தொடங்கிய நல்ல பணியிலும் குற்றங் குறை பரவ இடம் தந்து விட்டார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்சி மொழி என்ற விதிக்கு மிகச் சிறிதளவு விதிவிலக்குக் கொடுத்தார்கள். அவர்கள் காலத்திலேயே சிறிதளவு விதிவிலக்கு என்பது மாறி, பசையுள்ளவர்களுக்கும் பட்டணவாசிகளுக்கும் வழங்கப்படும் சலுகையாக நடைமுறையில் மாறிவிட்டது. காந்திய இயக்கத்தவர்களின் ஆட்சிக் காலத்திலே உயர் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்சி மொழி வளர்பிறையாக—ஏறுமுகமாக வளர்வதற்கு இடம் ஏற்பட்டுவிட்டது........இப்படிப்பட்ட சூழ்நிலையில் இரண்டு தலைமுறை கழித்தாவது கல்லூரிகளில் தமிழுக்கு நல்லகாலம் வருமென்று சொல்லுகிறாரே என்று மனத்தை அமைதிப்படுத்தத்தான் பார்க்கிறேன்.

காந்தியின் கருத்துரையும் கல்வி துறைத்தத்துவமும் உள்ளத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்துகின்றன! என்ன செய்யலாம்!

நந்தி விலகுமா? நந்தன் கோயிலுக்குள் இருக்கும் சாமியைக் கும்பிடுவானா?

நந்தன் திருநாளைப் போவார் ஆவானா?

இல்லை, 'ஏழிரண்டு ஆண்டின் வா' என்ற இலக்கிய நயத்தோடு சேர்ந்து, 'பையப் பையப் பைந்தமிழ் என்று பாடிச் சாகவா? 'முந்நூறு மைல் இல்லை; ஆறைங்காதம் அணித்து' என்று சிரிக்கவா?

அதிகாரக் குவியலை ஆந்திர முதலவரும் எதிர்க்கிறார்!

சென்னை 'தினத்தந்தி' 9-12-68 இதழில்வெளியாகியுள்ளசெய்தி வருமாறு:

ஐதராபாத், டிசம்ப 8 "கல்விக்கு என்று மாநிலங்களில் மந்திரி இருக்கும்போது, டெல்லியில் ஒரு கல்வி மந்திரி தேவை இல்லை!" என்று, ஆந்திர முதல் மந்திரி பிரம்மானந்த ரெட்டி கூறினர்.

ஆந்திர சட்டசபையில் அவர்; பேசியதாவது:—

"மத்திய அரசு பலம் உள்ளதாக இருக்கவேண்டும். மத்திய அரசு பலவீனம் அடைவதை நான் விரும்பவில்லை. ஆனால், மத்திய அரசின் பலம், மாநில அரசுகளின் பலத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

கல்வி, சமுதாய நலம், விவசாயம், கூட்டுறவு, பொது சுகாதாரம் ஆகிய இலாகாக்கள் மாநில அரசுகளின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. இந்த இலாகாக்களுக்கு, மாநிலங்களில் மந்திரிகள் இருக்கிறார்கள்.

அப்படி இருக்க இந்த இலாகாக்களுக்கு டெல்லியில் எதற்காக மந்திரி? டெல்லியில் இந்த இலாகாக்களை ரத்து செய்ய வேண்டும்.

துணி, புகையிலை, சர்க்கரை ஆகியவற்றுக்கு வரி போடும் அதிகாரம் இப்போது டெல்லியிடம் உள்ளது அந்த அதிகாரத்தை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

இதனால், டெல்லிக்கு ஒரு காசு கூட நட்டம் ஏற்பட்டுவிடாது."

இவ்வாறு பிரம்மானந்த ரெட்டி கூறினர்.

உடனே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். "என் கருத்தை நீங்களும் ஆதரிக்கிறீர்களா?" என்று பிரம்மானந்த ரெட்டி கேட்டபோது, அவர்கள் "ஆதரிக்கிறோம்" என்று ஒரே குரலில் கூறினர்கள்.

மறைவு

தம்மநாயக்கன்பட்டி தமிழரசுக் கழகப் பொருளாளரும் கண்ணகி காடமன்றப் பொருளாளருமான திரு. ச. இராசு அவர்கள் 14-10-68ல் வேலூர் கிறித்துவ மருத்துவ மனையில் உயிர் நீத்தார். அன்னாரின் உடல் தம்மநாயக்கன்பட்டியில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டது. தமிழரசுக் கழகத் தோழர்கள் கறுப்புச் சின்னம் அணிந்துகொண்டு, கழகக் கொடியினைச் சடலத்திற்கு அணிவித்து மரியாதை செலுத்தினர். சேலம் மாவட்ட தமிழரசுக் கழகத் துணைச் செயலாளர் க. இராசப்பா, கொண்டலாம்பட்டி தமிழரசுக் கழகத் தலைவர் உள்பட கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தம்மநாயக்கன்பட்டி, காமக்கல்பட்டி, தி மு. க. தோழர்கள், தம்மநாயக்கன்பட்டி இளைஞர் காங்கிரஸ் தலைவர் உள்பட பல காங்கிரஸ்காரர்களும் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

செங்கோல்

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	12-50
ஆறு மாதச் சந்தா	6-25
மூன்று மாதச் சந்தா	3-12
தனிப் பிரதி	0-25

மதிப்புரை

பாடி வந்த நிலா

இயற்றியவர்: கவிஞர் ஞானச்செல்வன்; வெளியிட்டோர்: அறிவு நிலையம், 31.சி, பிடாரி கோயில் தெரு, திருவாரூர். பக்கம் 94; விலை ரூ-2.

உலகத் தமிழ் மாநாட்டிலே "புகாரில் ஒரு நாள்" என்னும்கவிதையை அரங்கேற்றி இரண்டாவது பரிசு பெற்றவர் கவிஞர் ஞானச் செல்வன். அந்தக் கவிதையும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

இறைவனை 'அம்மை யப்பா!' என்றழைத்து அருள் வேண்டினர் ஆன்றோர். கவிஞர் ஞானச்செல்வன், இந்நூலில் பாயிரச் செய்யுளிலே, 'அப்பா!'—'அப்பா'—'அப்பா' என்று இருபது முறை அழைத்தழைத்து அருள் வேண்டுகின்றார்!

சிலப்பதிகாரத்தில் 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் அந்நாளில் வழக்கிலிருந்த சொற்களால் பூம்புகாரை வருணிக்கிறார் இளங்கோ. அதனை, தற்காலத்தில் வழக்கிலுள்ள பழகு தமிழால் சுவைபட வருணிக்கிறார் 'பூம்புகாரில் ஒரு நாள்' என்ற கவிதையிலே! இது, மனனம் செய்து மனத்தில் பதிய வைக்க வேண்டிய கவிதை!

கவிஞர் அரசியலையும் விட்டு விடவில்லை! "மாற்றம்" என்ற கவிதையிலே, கட்சி மாறும்—தலைக்குத்தலை கட்சி அமைக்கும் தறுதலைத் தனத்தை, கயமையைச்சாட்டை வேட்டித் துண்டுகளைச், சடுதியில் மாற்றும் செயலெனவே, நிட்டமின்றிக் கட்சி பல தினந்தினம் மாறுவதரசியலோ என்று கேட்கிறார், கவிஞர்.

கலைஞர் மு கருணாநிதி யவர்கள், தாம் தந்துள்ள 'அணிந்துரை'யில் இவரை 'வானம்பாடி'யென வருணிப்பது மிக மிகப் பொருத்தம்.

"மீசைத் தலைவர்" என்னும் கவியிலே தாம் சார்ந்துள்ள தமிழரசுக் கழகத்தின் தலைவருடைய தமிழ்ப் பணியை கவிஞர் நன்றி புணர்வோடு வருணிக்கிறார்.

செந்தமிழ் என்பது பண்டிதர் சொத்து
பண்டிதர் அன்றிப் பாமரர் எவரும்
கந்தமிழ் அறியார்! நற்சுவை தேரார்!
பண்டிதர் விட்டுப் பரணில்ஓலையாய்
ஒண்டிக் கிடக்கும் உயர் தமிழ்
அதுவாம்!
சிலம்பும் குறளும் மணிமே கலையும்
சொல்லத் தக்கார் கேட்கத் தக்கார்
எல்லாம் பண்டிதர்! எல்லாம்
பண்டிதர்!

அரசியல்வாதி இலக்கியம்
அறியான்!
இலக்கியம் கற்றவன் அரசியல்
புரியான்!
இந்த நிலையில் இருந்த நாட்டில்
பாமரர் ஒருவர், பல்கலைக் கழகப்
பட்டம் ஏதும் பார்த்தறி யாதார்
காந்தியார் வழியில் ஏந்திய கோன்
கையார்.
நெறிமுறை காத்த நேர்மையர்,
இலக்கியம்
கற்றோர் கற்றத் தெரிந்தார், ஆதலின்
பண்டிதர் வியந்தார்! பாமரர்
உவந்தார்!

என்ற வரிகளிலே, தமிழரசுக்கழகம், தமிழ் இலக்கியங்களை மக்களுடைமையாக்கிய மாண்பினை வருணிக்கிறார்.

பண்டிதர்கள் படைக்கும் ஏடுகளில் மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கும் சொற்களையும் கையாளுகிறாயினும், மக்களுக்குத் தேவைப்படும் பொருளோடு கலந்திருத்தலில், பாமரருக்கும் விருந்தாகக் காண்கிறோம்.

'கண்ணே பாப்பா தமிழ் பாடு,' 'சின்ன பாப்பா' எனத் தொடங்கும் குழந்தைப் பாடல்கள் மிக மிகச் சுவையானவை.

பண்டிதக் கவிஞர், குழந்தைக் கவிஞராகவும் மாறி, அத்துறையில் முன்னோடிகளாக விளங்குவோரையும் பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்து வருகிறார்.

கவிஞர்கள், தலைவர்கள் பற்றிய பாடல்களும் உள. தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கத்தக்க கவிதை நூல். தமிழரசுக் கழகத் தோழர் ஒவ்வொருவருடைய கரத்திலும் இருக்க வேண்டிய நூல்.

வால்கா விருந்து

இயற்றியர்: சா. கணேசன் (சென்னை மாநகராட்சி உறுப்பினர்); வெளியிட்டோர்: அழகிரி பதிப்பகம்; 11, வேளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை 24. பக்கம் 160, விலை ரூ. 2-50.

வால்கா கிராடு என்பது, சோவியத் ருஷ்யாவிலுள்ள நகரங்களுள் ஒன்று. அதன் மாநகராட்சி மன்ற அமைப்பை ஏற்று, இந் நூலாசிரியர் தாம் அங்கம் வகிக்கும் சென்னை மாநகராட்சி மேயருடனும் துணை மேயருடனும் அங்கத்தினர் சிலருடனும் நட்புறவுத்தூதுவராக சோவியத் நாட்டில் சுற்றுலாச் செய்த விவரம் இந்நூலில் வருணிக்கப்படுகிறது.

சோவியத் நாட்டிலன்றி, போலந்து, ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளிலும் சுற்றுலாச் செய்துள்ளனர்.

இதுவரை தமிழில் வெளியாகியுள்ள பயண நூற்களில் மிகச் சிறந்த நூல் இது எனலாம்.

நூலை ஒருமுறை படிக்கத்தொடங்கினால் அதனை முடிக்கும்வரை கீழே வைக்க மனம் வராதபடி, ஆசிரியருடன் சேர்ந்து நாமும் பயணம் செய்கிறோம்.

லெனின் கிராடு நகரை வருணிக்கும் இடத்தில், அந்தப் புனித மண்ணைக் காக்க அதில் வாழும் மக்கள் நடத்திய வீரப் போர்களை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார் ஆசிரியர். அந்த நகரத்து மக்கள் இரண்டாவது பெரும் போரின்போது, நாஜிப்படைகளைவிரட்டியடிக்க நடத்திய வீரப் போரின் வரலாற்றை—ஆசிரியர் தாம் அறிந்ததை—நமக்கு அறிவிக்கும்போது அவருடன் சேர்ந்து நாமும் கண்ணீர் சிந்துகின்றோம்.

வால்கா கிராடு, லெனின் கிராடு நகரங்களைச் சுற்றி வருங்கால் தமிழகத்தை மறந்துவிடவில்லை ஆசிரியர். தமிழகத்திலே வோட்டுப் புரட்சிக்குப் பின் அமைந்த தி. மு. க. அரசின் இரண்டாண்டு சாதனைகளை, இரத்தப் புரட்சிக்குப்பின் அமைந்த சோவியத் அரசின் அரை நூற்றாண்டு சாதனைகளோடு ஒப்பிட்டு, தாம் சார்ந்துள்ள கட்சிக்குப் பெருமை தேட முயல்கிறார்.

சொல்ல வேண்டிய வற்றில் ஒன்று விடாமல் சொல்லியிருக்கிறார் ஆசிரியர் சா. கணேசன். இவர் எழுதிய முதல் நூல் இதுவாயினும், தம் எழுத்தாற்றலை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். வழவழப்பான காகிதத்தில், அழகிய படங்களுடன், மிகவும் கவர்ச்சிகரமாக தயாரிக்கப் பட்டுள்ள நூல் இது.

"பயண நூல் எழுதுவது எளிதன்று; அதற்குத் தனித் திறமை வேண்டும்" என்பார்கள். 'வால்கா விருந்'தின் ஆசிரியரோ, முதல் முயற்சியிலேயே பயண நூல் எழுதி, தமிழக பொதுப் பணித் துறை அமைச்சரின் அணிந்துரையைப் பெற்றிருக்கிறார்.

ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

ஆசிரியருக்கு கடிதம்

"தீக்கதிர்" சிந்தனைக்கு!

ஐயா,

"செங்கோல்" இதழில், நாகர்கோவில் நாடாளுமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தலிலே திரு. காமராசர் போட்டியிடுவது பற்றி விமர்சிக்கப்பட்ட கட்டுரை ஒன்றிலே,

"கூட்டணியைப் பிளப்பதிலே இரண்டாண்டுகளுக்குப் பிறகு. இப்போதுதான் திரு. காமராசருக்கு முதல் வெற்றிகிடைத்திருக்கின்றது. இந்த நிலையை உருவாக்க திரை மறைவில் என்னவெல்லாம் நடந்தனவோ நாமறியோம்."

என்று எழுதப்பட்டதனை எடுத்துக் காட்டி, கட்டுரையாளரைக் குறை கூறியிருக்கிறது "தீக்கதிர்".

மற்றும், "கூட்டணி" என்பது தமிழகத்தில் எப்போது உருவாகியது என்ற வினா எழுப்பி, அதற்கு 'செங்கோல்' விடையளிக்க வேண்டுமென்கின்றது மார்க்ஸிஸ்டுகளின் வார இதழ்.

"சுதந்திராவும், கம்யூனிஸ்ட்டுக் கட்சி (மார்க்ஸிஸ்டு)யும் சேர்ந்து தி. மு. க.வுடன் கூட்டணி அமைத்துச் செயல்படுவதாக கற்பனை செய்துகொண்டு, அது உடைந்துவிட்டதாக கண்ணீர் விடவேண் தேர்தல் காலத்தில் தகைய உறவு இருந்தத

என்றும் கேட்கிறது 'தீக்கதிர்'.

'கூட்டணி' என்ற சொ இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி வார ஏடும், அதன் பெருந்த களும் எத்தனையோமுறை ப படுத்தியிருக்கிறார்கள். அ யிருக்க, இப்போதுமட்டும் ஒன்று கூட்டணியே இல்லை எ கூறுவானேன்?

கேரளம், வங்காளம் மாநிலங்களிலே காங்கிரஸ் லாத கட்சிகள் அமைச்சரவை கூட்டு சேர்ந்தன. சேர்ந்தும், உறுதியாக இல்லை.

தமிழகத்திலே, தலைவர், லாளா ஆகியோரைக் கொ செயல் அமைப்பு—அடிக்கடி ஆலோசிக்கும் நிறுவனம்—என் ரீதியில் கூட்டணி இல்லை. லும், காங்கிரஸ் அல்லாத களிடையே கூட்டுறவு வ இருந்துவரக் காண்கிறோம். மன்றத்திலே, இதுவரை ஒரு பிரச்னையிலும்—கடந்த டாண்டு காலமாக தி. மு. காங்கிரசும் அல்லாத கட்சிக எந்த ஒரு கட்சியும் ஆட்சிக்கு ராக ஓட்டுப் போடவில்லை, நடைமுறைப் பிரச்னைகளிலே. "கூட்டணி" என்று சொ "கூட்டுறவு" என்று பொரு தான். நாகர்கோயில் மு ஏற்பட்டதுபற்றி 'செங்கோல்' டுரையாளர் தெரிவித்த ஐய டிற்கு நேரடியாகப் பதில வில்லை 'தீக்கதிர்.'

வே. சாமிநா
திருவொற்றியூ

சென்னை:—27-11 68ல் காடு' பெயர் மாற்றக் கோ யின் வெற்றி விழாக் கூ சென்னை மாவட்ட தமிழரசுக் திருவல்லிக்கேணி வ. உ. சி றம் ஆகியவற்றின் ஆதரவில், வல்லிக்கேணி தேரடித் தெரு நடைபெற்றது. வ. உ. சி. ம றத் தலைவர் திரு. நாராயணசாமி வகித்தார். தலைவர் ம. பொ வேலூர் வே. இ. குப்பு கலைஞர். தி. க. சண்முகம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் னர்.

மஞ்சள் நீராட்டு அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

எனது அன்பு மகள் ஜெனிஸ் குமாரிக்கு 15-1 ஞாயிறு மாலை 6-15 ம மேல் பெரம்பூர் ராகவா தெரு 95-ஏ பொம்மை யாண மண்டபத்தில் இருக்கும் மஞ்சள் நீ விழாவிற்கு குடும்பத் வந்திருந்து செல்வி வாழ்த்துமாறு வேண்டுகி

அன்பன்.

அரு. அருணா நா
தமிழரசுக் கழக பேச்சா
எழுத்தாளர்—நாடக ஆ
தபால்—தந்தி.
3, சோமசுந்தர விநாயகர் 2வது
பெரம்பூர், சென்னை 11.

அன்றும்—இன்றும்-1.

அன்று ஒரு குரல்!

"அரசியல் சட்டத்திலே, ஒரு மாநிலத்திற்கும் மத்தியத்திற்குமோ, எல்லா மாநிலங்களுக்கும் மத்தியத்திற்குமோ ஏதேனும் குறை ஏற்பட்டு, அது நீக்கப்பட வேண்டும் என்றால், அதற்கெனத் தனியாக ஒரு கவுன்சிலை அமைக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் தருகிறது 268ஆவது பிரிவு. மற்றும், 368ஆவது பிரிவும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான வழி முறைகளைக் கூறுகின்றது.

"நம்முடைய மாநிலத்தின் மதிப்பிற்குரிய முதலமைச்சர், "மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வேண்டும்" என்று வெளியே கூட்டங்களில் சொல்லிக்கொண்டு வருகிறார். அப்படிப் பிரசாரம் செய்வதோடு, அரசியல் சட்டத்தின் 263ஆவது பிரிவின்படி, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமுரிய அதிகாரப் பொறுப்புக்களைத் திருத்தி அமைப்பது பற்றிப் பரிசீலிக்கக் குழு (கவுன்சில்) ஒன்று அமைக்குமாறு மத்திய அரசிடம் அவர் கேட்கவேண்டும். அதற்கான நேரம் வந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன்"

[27-3-67ல் தமிழக சட்டமன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ம. பொ.சி. நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி—சட்டப்பேரவைக் குறிப்பேட்டிலுள்ளபடி இங்கு தரப்பட்டுள்ளது. இதுவே பேரவையில் அவர் நிகழ்த்திய முதல் சொற்பொழிவு. இது, அப்போதே 'இந்து' முதலிய ஏடுகளில் வெளிவந்ததுடன், சென்னை வானொலியில் 'தமிழ்நாட்டுச் செய்தி'ப் பகுதியிலும் ஒலி பரப்பப்பட்டது.]

அன்றும் – இன்றும்-2

அன்று ம. பொ. சி.

"இந்தியாவில் ஒவ்வொரு துறையிலும் இரட்டையாட்சி நடைபெறுகின்றது. கல்வி, தொழில், சுகாதாரம், பொது மராமத்து, வேளாண்மை, போலீஸ் ஆகிய ஒவ்வொரு துறைக்கும் மத்தியில் ஒரு இலாகா, தமிழகத்தில் ஒரு இலாகா இருக்கின்றன. உண்மையில், கல்வி—சுகாதாரம்—பொது மராமத்து ஆகிய துறைகளில் மக்களுக்கு நேரடியாகப் பணி புரிவது மாநில அரசுதான். மத்திய அரசு இல்லை. அப்படியிருக்க, டில்லியிலும் கல்வி இலாகா, சுகாதார இலாகா இருக்கின்றனவே, எதற்காக? அவற்றிற்காக செய்யப்படும் செலவுகள் வீண். அவற்றைக் கலைத்துவிட்டால், ஆண்டுதோறும் பல நூறுகோடி ரூபாய்கள் மிச்சப்படும்.

[21-7-68அன்று மாலை சென்னை 'ஆபட்ஸ்பரி'யில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் ம. பொ. சி. நிகழ்த்திய தலைமையுரையின் ஒரு பகுதி. 'இந்து', 'தினமணி', 'எக்ஸ்பிரஸ்' ஏடுகளில் வெளியானது.]

இன்று ராஜாஜி

"அரசியல் சட்டரீதியாக மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள துறைகளுக்கு டில்லியில் மத்திய அமைச்சுத் துறைகள் தேவையில்லை."

"அப்படி அமைச்சுத் துறைகள் இருந்தாலும், அவற்றுக்கு வேலையில்லை. வேலையில்லாமல் இருக்குமிடத்தில் நல்லவை ஏற்பட முடியாது. அவை தீயவற்றின் இருப்பிடமாகிவிடும்."

"எனவே, வேளாண்மை, சுகாதாரம், கல்வி அமைச்சுத் துறைகள் கலைக்கப்பட்டு விடவேண்டும்.

[தலைவர் ராஜாஜி 1-12-68 'சுயராஜ்யா'வில் எழுதியது.]

இன்று பல குரல்கள்!

"மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே உறவை சீர்படுத்த இரு சாராரிடையேயும் நல்லுறவுநிலவ—தற்போதுள்ள உறவு முறை பற்றி ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை தர புதிதாக உயர்தர கமிஷன் ஒன்றை உடனடியாக குடியரசுத் தலைவர் நியமனம் செய்யவேண்டும்."

[ஜனசங்க உறுப்பினர் திரு. கன்வர்லால் குப்தா என்பவர், 3-12--68ல் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்த கருத்து.]

∴ ∴ ∴

"மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை மீண்டும் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளாக மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயுள்ள உறவு சீர்கேடு அடைந்திருக்கிறது. இதனை விசாரிக்க குடியரசுத் தலைவர் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் கோரினர்கள். அரசியல் சட்டத்தின் 263ஆவது பிரிவின்படி இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

"மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்து வழங்கிட வேண்டுமென்பது காலத்தின் குரல். இன்றில்லாவிடினும் மிக விரைவில் மாநில மக்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டே ஆகவேண்டும்."

"எனவே, அரசியல் சட்டத்தின் 263ஆவது பிரிவின்படி மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே இருக்கும் உறவு முறைபற்றி விசாரணைக் குழு அமைப்பதே முறையானதாகும்."

—'முரசொலி', 6-12-58.

வாழ்க ராஜாஜி!

அறிஞர் இராஜாஜி, டிசம்பர் 8ல் தொண்ணூற்று ஓராவது வயதைத் தொட்டு, முழு நூற்றாண்டை நோக்கி நடைபோடுகின்றார்.

விடுதலைப் போர் தந்த பெருந் தலைவர்களிலே, தாதாபாய் நௌரோஜிக்கு அடுத்தபடியாக தொண்ணூறுக்கு மேலும் வாழும் பேறு பெற்றவர் அறிஞர் இராஜாஜி அவர்களே யாவார்.

முதுமையிலும் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ்கின்றாராதலால், அவர் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ்வார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அவரது 91ஆவது பிறந்த நாளிலே, கட்சி வேறுபாடின்றி, அனைத்துக் கட்சியினரும் அவருக்கு வாழ்த்துக் கூறியிருக்கின்றனர். தமிழ்த் தாய் பெற்ற தவப் புதல்வருக்கு தமிழரசுக் கழகத்தின்சார்பில் நாமும் வாழ்த்து கூறுகின்றோம்.

ராஜாஜி, புகைநடுவினில் தீயிருப்பது போல, பகை நடுவினிலும் அன்பை வெளிப்படுத்தும் பண்புடையவராக வாழ்ந்து வருகின்றார். பொது வாழ்விலே, பகைவர் பலரை அவர் பெற்றதுண்டு. ஆயினும், அந்தப் பகைவர்களும் பாராட்டும்வகையில் ஒழுக்க வாழ்வு நடாத்தும் உத்தமராகக் காட்சியளித்து வருகின்றார்.

தனக்காகக் கட்சி; கட்சிக்காக தேசம்—என்று கருதாமல், தேசத்திற்காகவே கட்சியும் தானும் என்று கருதும் உயர்குணமுடைய பெருந் தலைவராக வாழ்ந்து வருகின்றார்.

ஆட்சியும் ஆளுங்கட்சியும் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளை, காலத்தோடு எடுத்துக் கூறி. அப்படிக் கூறியதனால்வரும் தீயவிளைவுகளைத் தாம் ஏற்றுக்கொண்டு, நல்ல விளைவுகளை நாட்டுக்கு ஆக்கும் தியாகியாக வாழ்ந்து வருகின்றார்.

அத்தகைய பெருந்தலைவர் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ இறையருளைப் பிரார்த்தித்து, அந்த முதுபெரும் ஞானிக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

வாழ்க, ராஜாஜி!

நமது பாதையில்

ம பொ. சி. சுற்றுலா

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களும், பொருளாளர் கலைஞர் தி க. சண்முகம் எம். எல். சி. அவர்களும் நவம்பர் 29, 30 தேதிகளில் திருச்சி மாவட்டத்தில் சுற்றுலாச் செய்து, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். விவரம் வருமாறு:

நவம்பர் 29-ஆம் தேதி காலை திருச்சி நகர் சேர்ந்து, அங்கு மாவட்ட—நகர கழகங்களின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசியபின்னர், பிற்பகல் 2-மணிக்கு சுமார் 45 கல் தொலைவிலுள்ள கரூர் நகருக்கு கலைஞரும் ம. பொ. சி.யும் சென்றனர்.

கரூர்

அங்கு அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி தமிழ் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு இருவரும் பேசினர். மன்றத்தின் சார்பாக இருவருக்கும் வரவேற்பிதழ் படித்தளிக்கப்பட்டது. தலைமை ஆசிரியை வரவேற்றுப் பேசினர். தமிழாசிரியை திருமதி. வேதநாயகம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

பின்னர், கரூர் கைத்தறி நெசவுத் தொழில் சங்க வெள்ளிவிழா திரு. எம். பி. நாச்சிமுத்து தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு காந்தியடிகள் உருவப் படத்தைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றினர் ம.பொ. சி. கலைஞர் சண்முகம் அவர்களும் நேருஜி படத்தைத் திறந்துவைத்துப் பேசினர். இந்த விழாவுக்கென்றே திரு லோக சீதாராம் புனைந்திருந்த பாடல்களைப் பாடினர்.

பின்னர், "தமிழ்நாடு" மகிழ்ச்சி விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினர் ம.பொ. சி. கலைஞர் தி. க. சண்முகம் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாடலைப் பாடினர்.

அன்றிரவே இருவரும் திருச்சி திரும்பினர்.

திருச்சி

மறுநாள் (30-11-68) சனிக்கிழமையன்று பிற்பகல் 3-30 மணிக்கு திருச்சி சேஷசாயி பொறியியல் கல்லூரி பணியாளர் கழகச் சார்பில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் கலந்துகொண்டு "சிலப்பதிகாரத்தில் பொறியியல்" என்னும் பொருள் பற்றிச் சிறப்புரையாற்றினர். கல்லூரி முதல்வர் திரு. கோ. சுந்தரம் தலைமைவகித்தார்.

கலைஞர் தி. க சண்முகம் அவர்கள் பாரதியார் பாடலொன்றைப் பாடினர். தலைவரும் கலைஞரும் கல்லூரி முதல்வரால் வரவேற்கப்பட்டனர்.

திருவரங்கம்

அன்றிரவு திருவரங்கம் ம. பொ. சி. படிப்பகத்தில் வானொலிப் பெட்டித் திறப்பு விழா நடைபெற்றது. கலைஞர் தி க. சண்முகம் வானொலிப் பெட்டியைத் திறந்து வைத்துப் பேசினர். தலைவர் ம. பொ. சி., தமிழரசுக் கொடியை உயர்த்திவைத்து படிப்பகத்திற்கு வாழ்த்து கூறிப் பேசினர். திருவரங்கம் நகர தி.மு.க. செயலாளரும் பேசினர். திரு. பெ. நடேசன் தலைவர்களை வரவேற்றும், திரு. ப. முனியப்பன் நன்றி தெரிவித்தும் பேசினர்.

இரவு 8மணிக்கு திருவரங்கம் த. அ.க. சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைவர் ம. பொ. சி. கலைஞர் தி க. சண்முகம், கவிஞர் தாமரைச் செல்வன், பொன்மலை க. மு.சீனிவாசன் ஆகியோர் பேசினர். திரு. பெ. நடேசன் தலைமை வகித்தார். பல்வேறு அமைப்புகள் சார்பிலும் தனி நபர்கள் சார்பிலும் கைத்தறித் துண்டுகள், மலர் மாலைகள் தலைவருக்கும் கலைஞருக்கும் அணிவிக்கப்பட்டன.

சென்னை

டிசம்பர் 1-ஆம் நாள் மாலை சென்னை மவுண்ட்ரோடிலுள்ள பாலர் அரங்கில் நடைபெற்ற 'தமிழ் நாடு' பெயர் சூட்டு விழாவில் ம. பொ. சி. தலைமை தாங்கினர். முதலமைச்சர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, திரு சி. பா. ஆதித்தனர், மேயர் நாராயணன் ஆகியோர் பேசினர். கலைஞர் தி. க. சண்முகம் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாடலைப் பாடினர். திரு. நீலநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

எண்ணூர்

மறுநாள் (டிசம்பர்2)இரவு 7மணிக்கு சென்னைக்கு வடக்கேயுள்ள எண்ணூரில் சென்னை மேயர், துணை மேயர் ஆகியோருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு, அவ்விருவரையும் பாராட்டிப் பேசினர் ம. பொ. சி. திரு. பட்சி இராசகோபாலன் அவர்களும் பேசினர்.

இரவு 8-மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற உமையாள்புரம் திரு சிவராம சாஸ்திரிகளின் 'ருக்மணி திருமணம்' என்னும் காலட்சேபத்திற்குத் தலைமை தாங்கி, அன்னாருக்குப் பாராட்டு வழங்கினர். திரு. மகாலிங்கம் ஐயர் ம. பொ. சி.யை வரவேற்றுப் பேசினர்.

மேலூர்: வைகை—பெரியாறு விஸ்தரிப்புப் பகுதி சர்வகட்சி விவசாயிகள் பொதுக்கூட்டம் 9-10-68 புதன்கிழமை மாலை மந்தைக் கோவில் மைதானத்தில், திரு. மு. அய்யாவு தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், திரு. பி. தம்பி நாயக்கர் எம். எல்.ஏ. (காங்கிரஸ்), திருமதி. கே.பி. ஜானகி எம்.எல்.ஏ. (கம்யூ.), திருவாளர்கள் வெ. சோமையா (காங்), வி. அன்புமணி (தி. மு. க.), மு. சி. கருப்பையா பாரதி (த. அ. க.), எஸ். பி. ஆர். கோவிந்தராசன் (மார்க்ஸிஸ்ட்), அமருத் தேவர் (சுதந்திரா) ஆகியோர் பேசினர்.

திருப்பத்தூர்: நகர த.அ. க.வின் செயற்குழு, தலைவர் திரு. தி. கு. சுப்பிரமணி தலைமையில், "மணி சைகிள் மார்ட்" அலுவலகத்தில் இரவு 9மணியளவில்கூடி, சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய தமிழக அரசுக்கும், இதற்கு ஒப்புதல் அளித்த மத்திய அரசினருக்கும் நன்றி தெரிவித்தும், இப்பெயர் மாற்றத்திற்கு அரும்பாடுபட்டு சிறை சென்ற த.அ.க.தொண்டர்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தலில் வேட்பாளராக கழக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை, நகர த.அ. க. பிரமுகர்களான திரு. தி. கு. சுப்பிரமணி, திரு. சி. சுப்பிரமணியக் கவுண்டர், மாவட்ட த. அ. க. தலைவர் திரு. தி. மு தேவராச முதலியார் ஆகிய மூவரைக் கொண்ட ஆய்வுக் குழுவிடம் விடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருப்பத்தூர்: நகராட்சி அலுவலகத்தில் நகரசபை தலைவர் திரு. சி. கே. சின்னராசு எம். எல். ஏ. அவர்கள் தலைமையில், 'தமிழ்நாடு' பெயர் சூட்டு விழா 3-12-68ல் நடைபெற்றது. திரு. ஆர். முத்து எம். பி. மாநில த. அ.க. பொது செயலாளர் திரு. வி கே. குப்புசாமி சிறப்புரையாற்றினர். திரு வி. கே குப்புசாமி, தனது சொற்பொழிவில் தமிழ் நாடு பெயர் சூட்டுப் பணியில் தமிழரசுக் கழகத் தொண்டர்களும், தலைவர் ம. பொ. சி. அவர்களும் ஆற்றியுள்ள தொண்டினையும், தியாகத்தையும் உணர்ச்சி பெருக்குடன் கூறினர். விழாவின் காலை, நகர மன்றத் தலைவர் தேசியக் கொடியேற்றினர். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

சென்னை மாநகராட்சித் தேர்தலில் த. அ. க. வேட்பாளராக நின்று வெற்றிபெற்ற பட்சி ராசகோபாலன் அவர்களுக்குப்பாராட்டு தெரிவித்தும், அவரது வெற்றிக்குப் பாடுபட்ட தோழமைக் கட்சியின ருக்குநன்றி தெரிவித்தும் தீர்மான நிறைவேற்றப்பட்டது.

அன்றிரவு திருவரங்கம் ம. பொ.

நடக்க இருப்பவை

திருப்பத்தூர் (வ. ஆ): நகர தமிழரசுக் கழக சார்பில் 15-12-68 அன்று மாலை தமிழ் நாடு மகிழ்ச்சி விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். சேலம் ஆ. சின்னையன் வேலூர் மு. சு. கிருஷ்ணமூர்த்தி, தி. மு. தேவராச முதலியார், திரு. சுப்ரமணியம் எம். சி. ஆகியோர் பேசுவர்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேனும் பொறுக்க முடியவில்லையோ? ம. பொ. சி. எம். எல். ஏ. வானால், 'பதவிப் பித்து' என்று மேடைதோறும் முழங்கினீர்களே, பெருந்தலைவர் நாகர்கோவிலில் தெருத் தெருவாக அலைகிறாரே, ஏன்? பதவி இச்சை இல்லாத பச்சைத் தமிழர்;

தம் சீட கோடிகளால்,

காந்தியத்தின் உண்மை வாரிசு

கம்யூனிச நாடுகளில் சோச சத்தைப் பரப்பிய முதல் இந்தியக் குடிமகன்;

நேருவுக்குப் பின்னால் ஐம்பது கோடி மக்களும் ஏகோபித்து ஏற்ற தலைவன்;

ஒன்பது ஆண்டுகள், முதல்வராக பணியாற்றி பதவியைத் துறந் மாமுனி—என்றெல்லாம் வருணிக்கப் பட்ட காமராசர் எம். பி. பதவிக் காக ஓடியாடி அலைகிறார் நாகர் கோயில் தெருக்களிலே! பத்தாண்டு களுக்கு முன்பு எம் தலைவர் ம. பொ. சி.யும் குமரி மாவட்டத்தில் தெருத் தெருவாக அலைந்து திரி தார்—எதற்காக? 'எல்லை மு பகுதியைத் தமிழகத்தோடு இணைக்க! இன்று காமராசர் அலை கிறார் எதற்காக? எம். பி. பதவியை அடைய! இவர்களில் யார் லட்சிய வாதி?

சிந்தித்துப் பார்த்து பதில் சொல்லுமா, 'நாத்திகம்!'

ஆசிரியர், வெளியிடுபவர்: ம. பொ. சிவஞானம் 1/29. இருசப்ப கிராமணிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 தமிழ்நாடு.
அச்சிட்டவர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், ஜானிஜான்கான் தெரு—சென்னை-14.